OS: 509/2018

Date: 13.10.2022

பெயர் : மனோகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி - 1, 2 பிரதிவாதிகள் தரப்பில்**

கூடுதல் பதிலுரை போடப்பட்ட விவரங்கள் எனக்கு தெரியும். கூடுதல் பதிலுரையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள புகைப்படங்கள் தெரியுமா என்றால் ஒருசில படங்கள் தெரியும், ஒருசில படங்கள் தெரியாது. என்னிடம் காட்டப்படும் 29 புகைப்படங்கள் தாவா சொத்து சம்மந்தமான இடம் என்று சொன்னால் சரிதான், அதில் காலி இடம் உள்ளதால் சென்று வருகிறார்கள். மேற்படி 29 புகைப்படங்கள் **பி.வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி புகைப்படங்களில் இருசக்கர வாகனங்கள், ஆட்டோ, மற்ற வண்டிகள் இருப்பதாக உள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படம் புகைப்படத்தில் டிரான்ஸ்பார்ம் உள்ளதை நான் மறுக்கிறேன் என்றும், எனது குறுக்கு விசாரணை சாட்சியத்தில் டிரான்ஸ்பார்ம் உள்ளதை ஒப்புக்கொண்டுவிட்டு தற்போது இல்லை என சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 2 புகைப்படத்தில் ஆட்டோ பின்பக்கமாக வந்துகொண்டிருக்கிறது என்றால் சரிதான். டாக்டர் வீட்டிற்கு அருகே இருக்கும் காரானது பின்புறம் வழியாக வந்து நிறுத்தப்பட்டிருக்கிறது என்றால் கோவில் நிலத்திலிருந்து வரவில்லை.

கோவில் நிலத்தின் முன்பகுதி எவ்வளவு அகலத்தில் உள்ளது என்றால் அது எனக்கு தெரியாது. கோவில் நிலத்தின் முன்பகுதியில் ஒரு லாரி செல்லும் அளவிற்கு அகலம் உள்ளது என்றும், தற்போது வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தின் நீள, அகலம் எவ்வளவு என்றால் எனக்கு சரியாக தெரியாது. எனக்கு நீள, அகலம் தெரியும் என்றும், பல ஆண்டுகளாக பொது பாதையாகத்தான் பயன்படுத்தி வரப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தற்போது காட்டியுள்ள புகைப்படம் அனைத்தும் வழக்கு சம்மந்தப்பட் இடம் என்றும், தற்போது அதுகுறித்து தெரியாது என நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்தபோது trustee ஆக இல்லை என்பதால் இவ்வழக்கு செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. தீர்மானம் எதுவும் தாக்கல் செய்யப்படாத நிலையில் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கு

தாக்கல் செய்யும்போது தீர்மானம் நகல் தாக்கல் செய்யவில்லை என்பதால் இவ்வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றால் சரியல்ல.

அ பதிவேட்டில் சௌடேஷ்வரி அம்மாள் என்றுதான் உள்ளது, ஆகவே தாவா சொத்திற்கும், எங்களுக்கும் சம்மந்தமே இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள பட்டாவிலும்கூட சௌடேஷ்வரி அம்மாள் என்றுதான் உள்ளது, ஆகவே அது தனிநபருக்கு சொந்தமானது என்பதால் வாதிகளாகிய நாங்கள் தாவா சொத்தில் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்து ச.எண்.81/1A தார் சாலையாகவும், 81/1S கட்டிடங்களாகவும், 81/1N பொது பாதையாகவும் உள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 trust deed படி வழக்கிற்கு பின்னிட்டுதான் பதிவு செய்யப்பட்டுள்ளதால் நான் வழக்கு நடத்தவே முடியாது என்றால் சரியல்ல. நான் துர்லாபம் அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க 3 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

**ஒப்பம்/PW1**

**ஒப்பம்/சார்பு நீதிபதி, ஓமலூர்**